சத்தியமே கடவுள் மலர்-4. மார்ச்-2013.



# காந்திநிகேதன் குரல்

# Voice of Gandhiniketan












பாத பூஜை



சூரிய நமஸ்க்காரம்





கொல்லவீரம்பட்டி கிராமம்



வாய்மையே வெல்லும்

## தலையங்கம்

# ஆசிரியர் குரல்

இன்று தனிநபர் விழிப்புணர்வு அதிகரித்துள்ளது. காரணம் ஊடகங்களும், செய்தித்தாள்களும்தான். அன்னாவரசாரேயின் உண்ணாவிரதம் போராட்டத்திற்கு எந்தவித அழைப்புமின்றி இந்தியாவெங்கிலும் ஆதரவுக்கூட்டங்கள் நடைபெற்றன. ஏனெனில் இந்தியர் ஒவ்வொருவரும் அன்றாட நிகழ்வுகளில் லஞ்சத்தால் பாதிக்கப்படுகின்றனர். இன்று லஞ்சம் தேசியமயம் ஆகிவிட்டது எனலாம். தேசிய புற்றுநோயாக வளர்ந்து வரும் லஞ்சம் எங்குபோய் முடியும் ? லஞ்சம் வாங்குவது குற்றம், என்ற உணர்வே இன்றி அது தான் செய்யும் பணிக்கு இரண்டாவது ஊதியம் என எண்ணும் நிலை வந்துவிட்டது.

வாழ்க்கை வசதிகளை அதிகரிக்க வேண்டும் வசதி படைத்தோரைப் போல் வாழவேண்டும். என்ற தணியாத ஆசை வந்தால் குற்றஉணர்வு எப்படி ஏற்படும்? செய்யும் தவறுகளுக்கு கடுமையான தண்டனைகள் சட்டத்தில் இல்லை என்ற காரணத்தில்தானே லஞ்சம் வாங்குகின்றனர். லஞ்சம் பெற்று பிடிபட்டாலும் எப்படியும் தப்பித்துவிடலாம் என்ற நிலைதானே தைரியமாக இந்த தவரைச் செய்யத்தூண்டுகிறது. தேவையற்ற சட்டங்கள் காலதாமதம் ஆகியவைதான் பொதுமக்களை லஞ்சம் கொடுத்தாவது காரியத்தை சாதித்துக் கொள்வோம் என்ற நிலைப்பாட்டை எடுக்க வைத்துள்ளது.

பள்ளி மாணவர்களிடையே தெரியாமல் இருந்த லஞ்சம் பற்றிய செய்திகள் ஊடகங்களால் அழுத்தமாக பதிந்துவிட்டன. பிஞ்சுமனங்களில் தஞ்சமடைந்துள்ள இந்த எண்ணங்கள் வருங்காலங்களில் சுனாமியாக தவறு என பொங்கியெழுமா? அல்லது அடங்கிவிடுமா? காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

தமிழாசிரியர்

தலைமையாசிரியர்



# சேவையின் உயர்வு (Service is the eternal happiness)

க. முத்துராமலிங்கம், தலைமையாசிரியர்

என்.எஸ்.எஸ் ன் குறிக்கோள் “எனக்காக அல்ல உனக்காக” என்பதாகும். இதன் பொருள் தன்னலமற்ற சேவை ஆகும். இன்னும் சொல்லப் போனால் மக்கள் சேவையே மகேசன் சேவை. இத்தன்னலமற்ற சேவை ஒரு மனிதனை மிக உயர்ந்த, உன்னத நிலைக்கு உயர்த்துகிறது. இங்கு இரு உதாரணங்களைப் பார்போம்.

உங்களுக்கு கால்பந்து (Foot Ball ) தெரியும். அதை வைத்து விளையாண்டும் இருப்பீர்கள். சரி, விளையாடுவதற்கு முன்பு நாம் என்ன செய்கிறோம். புதிய கால்பந்திற்குள் பம்பின் மூலமாக காற்றை செலுத்துகிறோம். ஊதிய காற்று முழுவதையும் கால்பந்து வைத்துக் கொள்கிறது. யாருக்கும் தருவதில்லை. தான் மட்டும் வைத்துக் கொள்கிறது, சுய நலம் உள்ள கால்பந்து.. அதனால் தான் நண்பர்களே அது காலால் எட்டி உதைக்கப்படுகிறது. இது போலத்தான் கைப்பந்தும். Volley ball அதற்குள் ஊதிய காற்றை யாருக்கும் கொடுக்காமல் தான் மட்டும் வைத்துக் கொள்வதால் கையால் அடி வாங்குகிறது. (தூக்கிப் போட்டு கட் அடித்தல் ) ஒன்று மிதி வாங்குகிறது, மற்றொன்று கைகளால் அடி வாங்குகிறது. இவை சுய நலம் உள்ளவை.

இன்னொரு உதாரணத்தையும் சொல்லுகின்றேன். நீங்கள் எல்லாம் புல்லாங்குழல் பார்த்திருப்பீர்கள். அதற்குள் நாம் காற்றை ஊதுகிறோம். அது காற்றை வாங்கி வைத்துக் கொள்வதில்லை. சீராக துளைகளின் வழியே வெளி விடுகிறது. அப்பொழுது ஒரு இனிய நாதம் பிறக்கிறது. அதில் நாம் எல்லாம் மயங்குகிறோம். அதனால் தான் அதை நாம் நித்தம் நித்தம் முத்தமிடுகிறோம். (அதில் வாயில் வைத்து ஊதுதல்)

தான் செய்கின்ற காரியம் இன்னது என்பதறியாமல், சுயநலமின்றி, வாங்கிய காற்றை பிறருக்கும் கொடுப்பதால் இனிய இசை பிறந்து, எல்லோராலும் மதிக்கப்படுகிறது.

மேலும் ஒரு படி மேலாக அந்த எம்பெருமான் கண்ணனின் கைகளில் போய் அமர்ந்து கொள்கிறது, தன்னலமற்ற சேவைக்கு இதைவிட உயர்வு உண்டா? சேவை செய்யுங்கள் உயர்ந்த உன்னத நிலைக்கு உயருங்கள்.

This motto of NSS is “Not Me But You” this means selfless service to the society. There is a proverb in Tamil meaning service to humanity is service to god him self.

Self less service elevate the individual to incredible height. Here is an example to prove it.

We blow air into the ball (foot ball & Volley ball ). The ball retains the air and does let it away. It keeps the air for its use alone. What happened to it ?

It is always kicked or thrown with force. It suffers a lot in the legs or hands of the players. On the other hand let us see the generous musical instruments like Nathaswaram or flute. What do they do ? They receive the air blown into them and transform them into finest and elegant musical notes and send them away to the enjoyment and the happiness of the others.

They never keep the air themselves for their selfless service the flute is awarded and rewarded. It adorns in the hands of lord Krishna. It attains the bliss.

It is even blessed with the heavenly embrace and kiss of lord Krishna from this example we can understand that self less service can elevate a man to god’s abode and brings him eternal happiness.

# புத்தகம் பேசுகிறது

இரா.ஜெனகராஜன் முதுகலை தமிழாசிரியர்

நல்ல புத்தகங்கள் நல்ல கனவுகளை வளர்க்கும். நல்ல கனவுகள் நல்ல எண்ணங்களை உண்டாக்கும். நல்ல எண்ணங்கள் நல்ல செயல்களை உருவாக்கும் என்பார் அப்துல்கலாம். ஒரு மனிதனை நெறிப்படுத்தவும் முறைப்படுத்தவும் உதவும் நல்ல நண்பர்கள் புத்தகங்களே!

ஒரு புத்தகத்தைப் படிப்பது ஒரு புதிய நண்பனைப் பெறுவது போன்ற இனிய அனுபவம். எகிப்திய மண்ணில் என்றோ வாழ்ந்து கால வெள்ளத்தில் கரைந்து மறைந்த அறிவார்ந்த பாரோ அரசன் தான் நெஞ்சார நேசித்து வாசித்த புத்தகங்களின் இருப்பிடத்தை ‘மன மருத்துவ நிலையம்’ என்று பெயரிட்டு மகிழ்ந்தானாம். எவ்வளவு அர்த்தம் செறிந்த அடைமொழி! நல்ல நூல்கள் ஒருவனை மனிதனாக மட்டுமல்ல மகாத்மாவாகவே மாற்றிவிடக்கூடும். காரணம் படிக்கும் புத்தகங்கள் மனதோடு பேசுவதால்தான்.

துளசிதாசரின் ராமாயணமும், வியாசரின் பகவத்கீதையும் பேசியதால்தான் இந்து சமயத்தின் சாரத்தை அண்ணல் காந்தி அறிந்து கொள்ள முடிந்தது. எட்வின் அர்னால்ட் எழுதிய விண்ணவர் பாட்டும், ஆசியாவின் ஜோதியும் பேசியதால் தான் காந்தியடிகள் பௌத்த நெறிகளில் பற்றுக் கொள்ள முடிந்தது. புதிய ஏற்பாட்டில் ஏசுவின் ‘மலைச் சொற்பொழிவும்' கார்லைல் வடித்த ‘வீரர்களும் வீர வணக்கமும்’ பேசித்தான் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் சமயங்களைத் தேசப்பிதாவுக்கு தெளிவாக இனம் காட்டின.

உலக வரலாற்றில் சில புத்தகங்கள் சரித்திர நதியின் போக்கையே மாற்றிச் சாதனை படைத்தன. சில புத்தகங்கள் மனித குலத்தை நல்வழிப் படுத்தின. ஒரு சில புத்தகங்கள் இனப்படுகொலைகளுக்கும் , உலகப் போருக்கும் உந்து சக்திகளாயின. வால்டேர், ரூசோவின் படைப்புக்கள் பிரெஞ்சுப் புரட்சிக்கு வழித்தடம் அமைத்தன.

ஆகவே புத்தகங்கள் பேசுகின்றன, மனித மனங்களோடு உறவாடுகின்றன, இல்லையென்றால் நாகரிக மாற்றத்தை இவ்வுலகம் கண்டிருக்க முடியுமா? அறிவியலில் சாதனைகள் நிகழ்ந்திருக்குமா? எண்ணிப்பாருங்கள்.

வேதங்களும் சமய இலக்கியங்களும் பேசியதால் தானே காட்டுமிராண்டியாய் வாழ்ந்த மனிதன் பண்பட்ட மனிதனாக மாற முடிந்தது. கம்ப நாட்டாழ்வார் இராமயணத்தின் வாயிலாகப் பேசியதால்தானே ‘ஒருவனுக்கு ஒருத்தி’ என்ற உயர்ந்த கோட்பாடு, எல்லோரையும் உறவுகளாகஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கு, பகைவனுக்கும் அருளவேண்டும் என்ற நன்னெறிகள் உலகினில் பரவின.

வியாச பெருமான் மகாபாரதத்தின் வாயிலாக பேசியிருக்காவிட்டால் நாம் அண்ணன் தம்பி உறவுகளையும், மண்ணாசையின் தீமையையும் என்றோ மறந்திருப்போமே? கருத்துப் பரிமாற்ற சாதனமாக கருத்துக்களின் பதிவு சாதனமாக அல்லவா புத்தகம் திகழ்கின்றது.



30.01.2012 அன்று காந்தியடிகளின் நினைவுதினம் ‘சர்வோதய தினமாகக்' கடைபிடிக்கப்பட்டது. அன்றைய தினம் ஆசிரமத்தில் நடைபெற்ற நூற்பு வேள்வி நிகழ்ச்சியில் பங்கேற்ற ஆசிரம ஊழியர்கள்.



13.06.2012 அன்று நிறுவனர் அமரர் கோ.வே.அவர்களின் 43 வது நினைவு தினத்தில் ஆசிரம வளாகத்தில் உள்ள கோ.வே. அவர்களின் நினைவிடத்தில் பள்ளிக் குழந்தைகள் மலரஞ்சலி செலுத்தியபோது எடுத்த படம்.

புத்தகங்களின் உருவத்தில் நாம் இவ்வுலகத்தையே சுற்றி வந்துவிடலாம். நூல்நிலையம், இவ்வுலகத்தின் உண்மையான பெரிய பல்கலைக் கழகமாக விளங்குகிறது. அடுப்பங்கரை முதல் அரசியல்வரை நூல்கள் நம்மை அழைத்துச் சென்று காண்பிக்கின்றன. சமயம் முதல் சரித்திரம் வரை அங்கே நாம் சஞ்சரிக்கலாம். இந்தியாவிலிருந்து எந்த நாட்டுக்கும் நாம் பயணம் சென்று வரலாம். பயனுள்ள முறையில் அறிவுப்பயணம் புரிவதற்கு நூல்களே சிறந்த சாதனம்.

புத்தகங்கள்….. நம் முன் நடமாடும், அலட்டிக்கொள்ளாத அறிவுஜீவன்கள். நட்புக் கொண்டால் நல்ல விஷயங்களை அள்ளித்தரும் அதிசய வள்ளல்கள். நடைமுறை வாழ்வில் பயணித்துப் பெற வேண்டிய அனுபவங்களை புத்தகங்கள் எளிமையாகக் கற்றுத் தரும். புத்தகங்கள் மொழிப்புலமை தரும். ஒரே வார்த்தைக்கு வெவ்வேறு அர்த்தங்கள் இருப்பதை அறியலாம். கல்வி தொடர்பான தேடல்களுக்கு புத்தகங்கள்தானே உறுதுணை!.

புத்தகத்தை வாசிக்கும் போது படிப்பாளியும் ஆகலாம். படைப்பாளியும் ஆகலாம். புத்தகங்கள் வழங்காத பயனை வேறு எதுவும் வழங்க முடியாது. அடக்கம், எளிமை, சகிப்புத் தன்மை, பொறுமை முதலிய நற்பண்புகளைப் பேசுவது புத்தகம் அல்லவா? புத்தகக் கருத்துக்களை சுவாசிக்கும் போது தானே மனிதனின் அரைவாழ்வு முழுவாழ்வாக மலர்கிறது?

காலம் முழுவதும் கோல நூல்களில் தோய்ந்து கிடப்பதொன்றே அறிவுப்புதையலை அடைவதற்குரிய ஒப்பற்ற வழி என்கிறார் வள்ளுவப் பெருமான்,

“தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத் தூறும் அறிவு

என்பதுதான் அவரின் தலைசிறந்த பிரகடனம். ‘மண்ணுக்குள் எந்த அளவு ஆழத் தோண்டிக் கொண்டே செல்கிறோமோ அந்த அளவு நீரைப் பெறுவதுபோல் எண்ணரிய நூல்களுள் மூழ்கும்போது தான் அறிவுச்செல்வம் பெருகுகிறது’ என்று அவர் கூறிய கருத்துக்கு ஈடு இணை ஏது? கன்னிமாரா நூலகத்தையும் சென்னைப் பல்கலைக் கழக நூலகத்தையும் கரைத்து குடித்ததால்தான் காஞ்சித் தலைவர் அண்ணா அவர்கள் பேறறிஞராகத் திகழ முடிந்தது.

அதனால்தான் விவேகானந்தர் இப்படி விவேகமுடன் கூறினார். ஒரு நூல்நிலையத்தின் கதவு திறக்கப்படும் போது இரு சிறைச் சாலைகளின் கதவுகள் மூடப்படுகின்றன. நல்ல புத்தகங்கள் பேசப்படும் பொழுது இந்த சமுதாயத்தைச் சுத்தமாக சலவை செய்துவிட முடியும்.

புத்தகம் இல்லாத வீடு ஜன்னல் இல்லாத அறை போன்றது. புத்தகங்களின் நடுவில்தான் குழந்தைகள் வளர்க்கப்பட வேண்டும். படிப்பதன் மூலம்தான் அறிவுக் கண் திறக்கும்.

நம்மைச் சிந்திக்கச் செய்யும் புத்தகங்களே நல்ல புத்தகங்கள். இசையின் இனிமை இசையமைப்பவரின் இசைக் குறிப்பில் இல்லை. அதைக் கேட்டுச் சிலிர்க்கும் இதயத்தில் இருக்கிறது. அதேபோன்று , புத்தகத்தின் பெருமை அதன் உள்ளடக்கத்தில் இல்லை. அது நமக்குள் உருவாக்கும் உந்துதலில் இருக்கிறது.

புத்தகங்கள் புனிதமானவை. அவை எதிர்பார்ப்புக்களுக்காக முகத்துக்கு நேரே எவரையும் முகமலரச் செய்வதில்லை. முதுகுக்குப் பின்னால் புறம் பேசுவதும் இல்லை.

அதனால்தான் நம் நெஞ்சில் தைக்கும் வண்ணம் “மெக்காலே” சொன்னார், ‘நான் சாகும்போது என்னைச் சுற்றி என் சம்பாத்தியம் குவிந்திருக்க விரும்பமாட்டேன். என் சொத்தையெல்லாம் நல்ல நூல்கள் உருவில் சூழ்ந்திருக்க அடையும் மரணந்தான் எனக்கு மகிழ்வு தரும்’ என்று

இந்த மேதைகளின் பாதையில் நாமும் நடப்போம். வாழும் நாளெல்லாம் நூலின்பம் வழங்கும் பேரின்பத்தில் திளைத்து மகிழ்வோம்.

## செய்தித் துளிகள்



சென்னை அப்போல்லோ மருத்துவமனையின் சார்பில் மாணவ மாணவிகள் பயன்பாட்டிற்காக சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து தரப்பட்டது.

# ஆசிரியர் தினம் -ஒரு சிறப்புக் கண்ணோட்டம்

K.நாகராஜன், இயற்பியல் ஆசிரியர்

செப்டம்பர்-5 ஆசிரியர் தினம். 124 ஆண்டுகளுக்கு முன்பு திருத்தணியில் ஏழை பிராமணர் குடும்பத்தில் பிறந்து பின்பு உலக நாடுகளை எல்லாம் தன் வசப்படுத்திய தத்துவமேதை சர்வபள்ளி டாக்டர் இராதாகிருஷ்ணன் பிறந்த நாள்.

மாணவர்களின் இதயச் சிம்மாசனத்தில் “சிறந்த ஆசிரியர்” என்னும் உயரிய இடம் பிடித்த ஒரு பிறவி ஆசிரியர். ஆசிரியர் பணி ஒரு தொழில் அல்ல அது ஒரு தியாகம் . அது ஓர் அர்ப்பணிப்பு…. அது ஒரு தொண்டு செய்யும் வாழ்க்கைப் பயணம் என்பதை உலகத்திற்கு உணர்த்தியவர். அத்தகைய மகான் இன்று நம்மிடையே இல்லாவிட்டாலும் அவரது பணியில் இருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டிய ஒரு நல்லாசிரியரின் செயல்பாடுகள் பற்றி நினைவுகூறுவோம்.

ஆசிரியர் என்பவர் யார்?

- மாதா, பிதா, குரு,தெய்வம்
- (மாதா,பிதாவிற்கு பிறகு குருவே தெய்வம்)
- குரு பிரம்மா, குருவிஷ்னு
- குருதேவோ மகேஷ்வரஹ
- குரு சாஸ்தா பரப்பிரம்மா தஸ்மய்ஸ்ஹ்ரீ
- ஸ்ரீ குருவே நமஹ
- நீ கடவுளை காண விரும்புகிறாயா?
- அதற்கு ஒரு கருவி ஆசிரியர்
- எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்

➢ A Teacher affects erernity / He can never tell where his influence stops –Hentry Adams

➢ The true Teacher is he who can immediately come down to the leave of the student and transfer his soul to the student and transfer his soul to the student’s soul- swami Vivekananda

➢ A good teacher must himself be a tellow traveller in exciting pursuit of knowledge- Dr.s.RadhaKrishnan

➢ One good School Master is worth a thous and Priests-(Ingersoll)

மாணவர்களை மனிதனாக்குவதில் ஆசிரியர்களின் பணி மகத்தானது. ஒரு மாணவன் எந்தத் துறையில் சாதனையாளராக இருந்தாலும் அவர்களது சாதனைக்கு ஆசிரியரே முதற்காரணம்.

மாணவர்கள் தவறு செய்தாலும் சற்றுப் பெருந்தன்மையுடன் இருந்து பாருங்கள் அவர்கள் தங்களது நல்லகுணத்தை மெல்ல மெல்ல வெளிப்படுத்துவார்கள். அதற்கு நமக்கு அன்புடன் கூடிய பொறுமை தேவை. தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற ஒரு மாணவனுக்கு ஆசிரியர் பரிசளித்தார்.

அதற்கு அந்த மாணவன் “ஐயா என்னை மன்னியுங்கள் இப்பரிசு பெறத் தகுதியற்றவன் நான் ஏனெனில் என் நண்பனைப்பார்த்தே நான் காப்பியடித்து தேர்வு எழுதினேன்” என்று கூறினான்.

செய்தித் துளிகள்




இந்த ஆண்டிற்கான தேசிய நல்லாசிரியர் விருதினை நமது பள்ளியின் வேதியியல் ஆசிரியரும், உதவித் தலைமையாசிரியருமான திரு.க.முத்துராமலிங்கம் அவர்களுக்கு இந்திய குடியரசுத் தலைவர் மாண்புமிகு பிரணாப் முகர்ஜி அவர்கள் வழங்கினார்.




இந்த ஆண்டின் மாநில நல்லாசிரியர் விருதினை நமது பள்ளியின் பட்டதாரி ஆசிரியர் திரு.N.இரமணிசேகர் அவர்களுக்கு மாநில கல்வித்துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

ஆசிரியர் சற்று யோசித்துவிட்டு அவனைக் கண்டிக்காமல் அவனுக்கே பரிசைத் தந்து "முதலில் நான் பரிசு தர நினைத்தது உன் மதிப்பெண்களுக்காக, இப்போது தருவது நீ உண்மையை உரைத்தற்காக" என்றார்.

மாணவன் நெகிழ்ந்து போனான். அவன் தான் நம் நாட்டு விடுதலை வீரரான –கோபால கிருஷ்ண கோகலே.

ஒரு நாள் ஆசிரியர் வகுப்பறையில் "மாணவர்களே! இன்று உங்களுக்குள் ஒரு போட்டி. உங்களுக்கு பிடித்த ஒன்றை வரைந்து காட்டுங்கள் சிறந்த ஒன்றுக்கு பரிசு உண்டு" என்று கூறினார்.

மாணவர்களும் தயாரானார்கள். அவரவர் விருப்பப்பட்ட படைப்புகளைக் கொடுத்தனர். அதில் ஒரு படைப்பு மட்டும் சற்றே வித்தியாசமானதாக இருந்தது. அதில் இருந்தது ஒரு கை மட்டும். இதைப்பார்த்ததும் மாணவர் ஒவ்வொருவரும் ஒரு கருத்தைக் கூறினர். இது "உணவூட்டும் உழவன்கை" என்றனர். சிலர் "உலகை உயர்த்தும் விஞ்ஞானியின் கை" என்றனர். பலர் கடவுளின் ரட்சிக்கும் கை" தான் இது என்றனர். ஒருசிலர் இவ்வாறு பலர் பலவிதமான கருத்துக்களை கூறும்போது, உண்மையில் வரைந்த அந்த மாணவனை அழைத்து கேட்டனர் நடுவர் குழுவினர். இது யாருடைய கை? என்று .

அதற்கு அந்த மாணவன் நாணம் மேலிட முகத்தை ஒரு பக்கமாகச் சாய்த்துக் கொண்டு எனக்கு பாடம் சொல்லிக் கொடுக்கும் எனது அன்புக்குரிய ஆசிரியரின் கை" என்றான்.

ஆசிரியர் அசந்து போனார். ஆனந்தக் கண்ணீர்த்துளி அப்படத்தின் கையில் விழுந்தது. எனவே மாணவனிடத்தில் அன்பு இருந்து தனது பாடத்தில் திறமையுள்ள ஒரு ஆசிரியரை மதிக்காத மாணவனே இல்லை என்ற உண்மையை அனைவரும் ஏற்றுத்தான் ஆகவேண்டும். அதேபோல் ஆசிரியர் காட்டும் அன்பு, இரக்கம் போன்ற பண்புகளே குழந்தைகளின் மனதில் படிகின்றன. சாக்ரட்டீஸ் ஆசிரியர்களுக்கு சொன்னாராம், "குழந்தைகளுக்கு இதயத்தைக் கொடுங்கள் அவர்கள் உங்களுக்கு உயிரைக் கொடுப்பார்கள்" என்று.

தசரதன் மகன் என்பதை விட வசிஷ்டரின் மாணவன் என்பதில்தான் ராமனுக்கு பெருமை அதிகம். வசிஷ்டரின் மாணவன் என விஸ்வாமித்திரர் அறிமுகம் செய்ததால்தான் ஜனகர் தன் மகள் சீதையை பயமின்றி ராமனுக்கு மணமுடிக்க சம்மதித்தாராம்.

எனவே அன்பிற்குரிய சகஆசிரியப் பெருமக்களே ஆடுமாடுகள் போல் ஏதோ பிறந்தோம், இறந்தோம் என்று இல்லாமல் மாணவர் நலனுக்காக ஏதேனும் ஒன்றை சாதித்தே ஆகவேண்டும் என்ற உயரிய கொள்கையுடன் எதிர்காலத்தை நோக்கிப் பயனிக்க வேண்டுகிறேன் .

நாட்டின் எதிர்காலத் தூண்களான, பாசமிக்க மாணவச் செல்வங்களிடம் நான் கேட்டுக்கொள்வது,

விளக்கு வெளிச்சத்தில் ஓர் ஏழைக்கு நூறு ரூபாய் தரலாம். வேறொருவன் உங்கள் கையெழுத்தைப் போட்டு மோசடியும் செய்யலாம் வெளிச்சம் இருவருக்கும் ஒன்று தான்.

விளக்கு வெளிச்சம் போல் ஆசிரியர் அனைவருக்கும் பொதுவானவர். ஆசிரியர்களை மாணவர்களாகிய நீங்கள் பயன்படுத்திக் கொள்ளும் விதத்தில் தான் உங்கள் எதிர்கால முன்னேற்றம் இருக்கிறது. கிண்டலும், கேலியும் பண்ணுவதால் நஷ்டம் மாணவர்களுக்கு மட்டுமேயன்றி, ஆசிரியர்களுக்கு அல்ல.

ஆசிரியர்கள் உங்கள் அறிவுக் கண்ணைத் திறந்து, ஆற்றலை வெளிக்கொணரும் உங்களது இரண்டாவது கடவுள் போல.

குருவைப் போற்றிய ஏகலைவன் உயர்ந்ததும், குருவை ஏமாற்றிய கர்ணன் மந்திரத்தை மறந்து மரணத்தைத் தழுவியதும் -நம் புராணங்கள் கூறும் சான்றுகள்.

உலகத்தில் உத்தமமான இரண்டு இடங்கள் உண்டு. ஒன்று தாயின் கருவறை. மற்றொன்று ஆசிரியரின் வகுப்பறை. கருவறையில் ஒருவன் உயிரைப்பெறுகிறான். வகுப்பறையில் ஒருவன் அறிவைப் பெறுகிறான்.

ஆகவே மாணவக் கண்மனிகளே, ஒழுக்க முறையுடன் கூடிய கல்வியைக் குறைவின்றிக் கற்று, ஆக்கபூர்வமான சிந்தனைகளுடனும், தன்னம்பிக்கையுடனும், ஒளிமயமான எதிர்கால இந்தியாவைப் படைக்க பாடுபடவேண்டும்.

"உங்களது இன்றைய செயல்

நாளைய வெற்றியை நிர்ணயிக்கும்"

என்று கூறி. இப்படைப்பினை படித்த உங்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

# கிராமப் பணிகளில் சில....



கல்லுப்பட்டிக்கு அருகில் உள்ள சோலைபட்டி கிராமத்தில் நமது பள்ளி நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்களின் சிறப்பு முகாமில் பல்வேறு திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. கால்நடைகளுக்கான சிறப்பு மருத்துவ முகாமில் ஒரு ஆட்டிற்கு மருத்துவ உதவி வழங்கப்பட்டபோது எடுத்த படம்.



அப்பல்லோ மருத்துவ மனையுடன் இணைந்து நமது தத்து கிராமமான கெஞ்சம்பட்டி பஞ்சாயத்திற்கு உட்பட்ட கொல்லவீரன்பட்டி கிராமத்தில் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான சிறப்பு முகாம் சென்ற மாதம் நடத்தப்பட்டது.

## செய்தித் துளிகள்



நமது ஆசிரமத்தின் தற்போதைய தத்து கிராமங்களான கெஞ்சம்பட்டி பஞ்சாயத்திற்குட்பட்ட கிராமங்களில் மலேரியா மற்றும் டெங்கு காய்ச்சல் விழிப்புணர்வு கருத்தரங்கு நடத்தப்பட்டது. நல்லியதேவன்பட்டி கிராமத்தில் கண்மாயில் வேலைசெய்து கொண்டிருந்த கிராம மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நமது பள்ளி ஆசிரியர்கள்.



இந்தியாவின் 64வது குடியரசுதின விழா 26.01.2013 அன்று நமது ஆசிரமம் மற்றும் நமது ஆசிரம தத்து கிராமங்களில் ஆசிரமத்தின் சார்பில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. நமது தத்துகிராமமான கன்டியதேவன்பட்டி கிராமப் பள்ளியில் அக்கிராமத்தின் கவுன்சிலர் மாணவிகளுக்கு பரிசு வழங்கியபோது எடுத்த படம். அருகில் நமது பள்ளி மற்றும் அப் பள்ளியின் ஆசிரியர்கள்.

## நட்பு

G.மாரிச்செல்வம்,VII-B

இதயம் கலந்த நட்பை
காலம் கடந்த பின்

யோசித்து பார்!
கண்களில் கண்ணீர்

கசியும்
தூண்டிலில் சிக்கிய மீனும்
உன்நட்பில் கலந்த நானும்
உன் விடுதலைக்காகவும்
உன் நட்புக்காகவும்

பூக்கள் பூக்கட்டும் !
உன் புன்னகையைப் பார்த்து
நட்புத் தொடரட்டும்

கவிதை தெரியாது எனக்கு!
உன் நட்பைத் தவிர வேறு எந்த
கவிதையும் தெரியாது.

## சிறுசேமிப்பு

S.ஸ்ரீபாண்டிச் செல்வி XII-A

**முன்னுரை:**

வள்ளுவர் பொருளின் இயல்பை நன்கு உணர்ந்தவர். அதனால் தான் ' பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை' என்றார். இந்தப் பொருள் ஓரிடத்தில் நில்லாது உருண்டோடிடும் தன்மை கொண்டது. இதனால்தான் பொருளைச் 'செல்வம்' என்று கூறினார்கள். செல்வம் என்பதன் பொருள் “நாம் செல்வோம்” என்பதை உணர்த்துவதாகும்.

**சிக்கனமாவது யாது:**

செல்வம் செல்லும் தன்மை கொண்டது எனின் அதைச் செல்ல விடாமல் தடுப்பது எப்படி? அதுவே சிக்கனம் ஆகும். ஒருவன் தான் வாழ்வதற்கு ஏற்ற முறையில் பொருளைச் செலவிட்டு வீண்செலவு செய்யாமல் வாழ்வதே சிக்கனமாகும். நம்மவரில் பலர் ஆடம்பரத்துக்காகச் செலவு செய்கின்றனர். பிறர் தம்மைப் பார்த்து மெச்ச வேண்டும் என்பது மட்டுமே குறிக்கோளாகச் சிலர்க்கு அமைகின்றது. இன்றைக்கு வந்த பொருளை இன்றே செலவு செய்துவிட்டால் நாளைய செலவுக்கு வழி யாது? இன்று வந்த வருவாயைப் போல் நாளையும் நமக்கு வருவாய் வரும் என்று எண்ண முடியுமா? முடியாதே! அப்படியிருக்க கிடைத்த பொருளைச் செம்மையாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று ஏன் எண்ணக் கூடாது?

**வள்ளுவர் வாக்கு:**

பொருளை இயற்றலும் ஈட்டலும், காத்தலும், காக்க வகுத்தலும் வேண்டும் என வள்ளுவர் கூறுகின்றார். “குந்தித் தின்றால் குன்றும் குறையும் என்பது பழமொழி “ஆற்றங்கரையின் மரமும் அரசறிய வீற்றிருந்த வாழ்வும் வீழும்” என்பது ஔவையின் வாக்கு. ஆகையால் பொருளை, செலவைக் கட்டுப்படுத்துவதே சிக்கனம். நன்கு சிந்தித்துப் பார்த்தால் என்னென்ன வகையில் செலவுகளைச் செய்தோம் என்பது புலப்படும் வகையில் நம்மை நாமே ஆராய்ந்து பார்க்க வேண்டும். இதற்கு ஒரு முறை உண்டு. அதாவது ஒருமாதம் நாம் என்னென்ன செலவு செய்தோம் என்று ஒரு தாளில் எழுதுங்கள். பின்பு அவற்றுள் உணவுக்கு எவ்வளவு செய்தோம், உடைக்கு எவ்வளவு செய்தோம் பயண வகையில் எப்படிச் செலவு செய்தோம், மற்றவற்றிற்கு எவ்வளவு செலவு செய்தோம் என்று புலப்படும். அவற்றுள் தவிர்க்கக் கூடியவை எவை எனத் தேர்ந்து அவற்றை விலக்கி விட வேண்டும் .

**சிந்திக்க வேண்டும்:**

உடையை எடுத்துக் கொண்டால் பருத்தி ஆடை சிறந்தது. ஆடம்பரப் பட்டாடை தேவையற்றது. உணவைப் பற்றிச் சிந்தித்தால் உடலுக்கு ஏற்றதும் ஊறு அற்றதுமான உணவை உண்ண வேண்டும். காந்தியடிகளின் சிக்கனம் குறிப்பிடத்தக்க ஒன்று, எட்டு முழம் வேஷ்டி கிழிந்ததும், அதை மேலுடையாய்க் கொண்டார். அதன் பின் அது கிழிந்ததும் கை துடைக்கும் துணியாகக் கொண்டார். இந்த முறையை அப்படியே நாம் ஏன் கடைப்பிடிக்கக் கூடாது? சிந்திக்க வேண்டும்.

**பலர் அனுபவம்:**

பலபேருடைய அனுபவம் இது. அவர்கள் சிக்கனமாய் வாழ்வு நடத்தினாலும் அவருடைய மனைவி, மக்கள் ,உறவினர் ஆகியோர் அந்த




சிக்கனத்தை ஏற்றுக் கொள்வதில்லை. மாறுபடுவர். இத்தகைய நிலை ஏற்பட்டால் சிக்கனத்தின் பயனை வெளிப்படுத்திக் காட்டி அவர்கள் சிக்கனத்தை மேற்கொள்ளும் படி அறிவுரை கூற வேண்டும்.

**சிக்கனமே சிறந்த துணையாகும்:**

நாம் சேர்த்த பொருளைக் கையில் வைத்துக் கொள்ளக் கூடாது அதனைச் சிறந்த வங்கியில் இட்டு சேமிக்க வேண்டும். அஞ்சலகச் சேமிப்பு பாதுகாப்பான சேமிப்பு. மாதாமாதம் பணத்தைச் செலுத்திப் பின்பு மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம். அதற்கு வட்டியும் உண்டு. அஞ்சலகத்தின் சேமிப்புகள் பயனுள்ளவையாய் உள்ளன. நாம் செலுத்திய பணத்துக்கு இரட்டிப்பாகப் பணத்தைத் தரும் திட்டம் ஒன்றுண்டு.இத்தகைய சேமிப்புகளால் நம் வாழ்வு வளம் பெறும். மேலும் மாணவர்கள் தம் பெற்றோர் மற்றும் உறவினர் தரும் பணத்தைச் செலவு செய்யாமல் பள்ளியில் உள்ள ‘சஞ்சாயிகா’ என்னும் சேமிப்புத் திட்டத்தில் இட்டுச் சேமிக்க வேண்டும். பள்ளி தொடர்பான சிறு சிறு செலவுகளுக்குப் பெற்றோரை எதிர்பார்க்காமல் அவர்தம் சேமிப்பிலிருந்தே எடுத்துக் கொள்ளலாம். அஞ்சல்தலைகளை வாங்கி அவற்றைச் சேமித்து ஆண்டு முடிவில் பெருந்தொகையைப் பெறலாம். சேமிக்கும் பழக்கம் வீட்டைக் காக்கும், நாட்டை உயர்த்தும் இதனை மாணவப்பருவத்திலேயே நாம் உணரவேண்டும்.

**சிறுசேமிப்பின் சிறப்பு:**

சில ஆண்டுகளுக்கு முன்பு உலகப்பொருளாதாரம் சரிவைக்கண்டது. அமெரிக்க ஐரோப்பிய நாடுகளில் நூற்றுக்கும் மேற்பட்ட வங்கிகள் மூடப்பட்டன. தனியார் நிறுவனங்களில் பலர் வேலை இழந்தனர். பல நாடுகள் வெளிநாட்டவரை வெளியேற்றின. தொழிலாளர்களுக்குச் சம்பளம் குறைவாகக் கொடுக்கப்பட்டது. காரணம் டாலர் மதிப்பும் யூரோ கரன்சியின் மதிப்பும் குறைந்ததால் தான். இதனால்உலகநாடுகளில் பொருளாதாரமும் ஆட்டம் கண்டது. ஆனால் இந்தியாவில் பொருளாதாரச் சரிவுஏற்பட வில்லை. ஏனெனில் இந்தியர்கள் பாரம்பரியமாகவே சேமிக்கும் பழக்கம் கொண்டவர்கள். தங்கமாகவோ, வங்கிகளில், அஞ்சலகங்களில் முதலீடுகளாகவோ தங்கள் சேமிப்பை வைத்திருக்கிறார்கள். அரசின் பல்நோக்குத் திட்டங்களுக்கு அவை பயன்படுவதால் இந்தியப் பொருளாதாரம் வலிமையாக இருக்கின்றது.

**முடிவுரை:**

சேமிப்பு என்ற மந்திரச் சொல் மக்கள் அனைவரின் நெஞ்சங்களில் இடம் பெறவேண்டும். சேமித்தால் நாம் மட்டுமின்றி நம்மைச் சார்ந்தோரும் நாடும் பயன்பெற வகை செய்கின்றோம். சேமிப்பு இருந்தாலே வாழ்வில் எதையும் எதிர்நோக்கும் மனவலிமை வந்துவிடும். ஆகவே சேமிப்போம் வாழ்வில் உயர்வோம்.

## விடுகதை

M.முத்துலட்சுமி VII-B

1. கை உண்டு. பிடிக்க முடியாது
   கால் உண்டு . நடக்க முடியாது அது என்ன ?
   நாற்காலி
2. காலில்லை. வெகுதூரம் செல்வான்
   வாயில்லை. செய்தி பல சொல்வான் அது என்ன ?
   கடிதம்
3. படுத்து உறங்காத மிருகம்
   பந்தயத்தில் ஓட்டம் அதிகம் அது என்ன ?
   குதிரை
4. சீப்பு உண்டு. தலை வார முடியாது
   பூஉண்டு. மாலை கட்ட உதவாது அது என்ன ?
   வாழை மரம்
5. ஒற்றைக்காது உடையவன் ஒல்லியான மனிதன்
   ஓடி ஓடி இணைப்பான் அது என்ன ?
   ஊசி
6. ஆகாய நீர் கொட்டும் போது ஆளைக் காக்க
   மலருவான் அது என்ன ?
   குடை
7. உயிரில்லாப் பறவை ஊர் ஊராய்ப் பறக்கும்
   அது என்ன ?
   ஆகாய விமானம்
8. ஒற்றைக் காலில் சுழன்றிடுவேன்
   சிறுவர்களை மகிழ்விப்பேன் தலை சுற்றி
   விழுந்திடுவேன் நான் யார் ?
   பம்பரம்
9. உன்னுடன் ஒருவன் ஓடிக்கொண்டே இருக்கி-
   றான் அவன் யார் ?
   நிழல்
10. உலகத்திலேயே மெலிந்தவன்,
    உடுப்பைகாப்பவன் அவன் யார் ?
    ஊசி

## காந்தியடிகளும் ஹரிசன சேவையும்

கோ.பிரியதர்சினி XII-A

காந்தியடிகள் நமது நாடு சுதந்திரம் பெற பல சத்தியாக்கிரங்களையும் போராட்டங்களையும் ஒத்துழையாமையையும் மேற்கொண்டார். அதே வேளையில் இந்திய மக்களிடையே காணப்பட்ட வாழ்க்கை முறையில் பலவித வேறுபாடுகள் நாட்டின் வருங்காலத்திற்கு இடையூறாக இருக்கும் என்பதை அறிந்தார். அதில் முக்கியமாக 'தீண்டாமை என்பது ஒரு சாபக்கேடு' என்று அவர் கருதினார்.

இதைத்தான் வாழ்க்கையில் அனுபவித்தார். தென்னாப்பிரிக்காவில் இருந்தபோது தன்னுடன் வேலைபார்த்த தாழ்த்தப்பட்டவரை தன் வீட்டில் வைத்திருந்தபோது தனக்கும் மனைவி கஸ்தூரிபாய்க்கும் தகராறு ஏற்பட்டு கஸ்தூரிபாயை வீட்டைவிட்டு வெளியே தள்ளியும் உள்ளார்.

சபர்மதி ஆசிரமத்தில் இருந்தபோது தக்கர்பாபா என்ற பெரியவர் சிபாரிசின் பேரில் ஒரு ஹரிஜன குடும்பத்தை ஆசிரமத்தில் சேர்த்துக் கொண்டார். அதனால் ஆசிரமத்தில் இருந்த மற்றவர்கள் அக்குடும்பத்தை ஒதுக்கி வைத்ததனைக் கண்டார் ஆசிரமத்திற்கு பணம் அனுப்பிய மேல்மட்ட இந்துக்கள் பணம் அனுப்புவதை நிறுத்தி விட்டனர். மறுநாள் செலவிற்கே பணம் இல்லாதநிலை ஏற்பட்டது. அப்போது ஒரு தனவான் தானே முன்வந்து பணம் கொடுத்தார்.

இதை எல்லாம் கண்ட காந்தியடிகள் இந்த தாழ்த்தப்பட்ட மக்களை உயர்த்த வேண்டுமென்று தீர்மானித்தார். தீண்டத்தகாதவர்களுக்கு 'ஹரிஜன' அதாவது "கடவுளின் மக்கள்" என்ற பெயரை ஏற்படுத்தினார். அதற்காக தக்கர்பாபா என்ற பெரியவரின் தலைமையில் ஹரிஜன சங்கம் என்ற அமைப்பை ஏற்படுத்தினார். நாடு முழுவதும் ஹரிஜன சேவாசங்கம் உண்டாக்க ஊக்குவித்தார். அதோடு ஹரிஜன் என்ற ஒரு பத்திரிக்கையும் ஏற்படுத்தி, நாடு முழுவதும் தீண்டாமையின் தீமைகளையும் அதற்கான தீர்வுகளையும் வெளியிட்டார்.

தீண்டத்தகாதவர்கள் எனக் கருதப்பட்ட மக்களுக்காக மாணவர் விடுதிகள் ஏற்படுத்தி கல்விகற்க ஏற்பாடுகள் செய்தார். நமது மதுரை நகரில் அப்போது கோபால் சாமி அய்யர் என்ற பெரியவர் தலைமையில் ஹரிஜன சேவா சங்கம் ஏற்படுத்தி மாணவர்கள் விடுதி உண்டாக்கி தாழ்த்தப்பட்ட மாணவர்கள் கல்வி கற்க ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த விடுதி தற்போதும் மதுரையில் உள்ளது.

தீண்டப்படாத மக்கள் எல்லோரும் சமமானவர்கள் என்பதை உறுதிப்படுத்த கோவில்களுக்கு அதுவரை செல்ல முடியாத ஹரிஜனங்கள் கோவிலில் சென்று வழிபட தானே முன்னின்று ஆலயப்பிரவேசம் செய்ய அழைத்துச் சென்றார். மதுரை மீனாட்சியம்மன் கோவிலில், திரு.வைத்திய நாத அய்யர் என்ற பெரியவரின் தலைமையில் முத்துராமலிங்கதேவர் உதவியுடன் ஆலயப்பிரவேசம் நடைபெற்றது. அந்த விழாவின் நினைவாக சென்றவாரம் திரு.குமரிஅனந்தன் தலைமையில் நினைவு ஆலயப்பிரவேசம் நடைபெற்றது. காந்தியடிகள் நமது ஆசிரமத்தில் ஒரு ஹரிஜன குழந்தையை தத்தெடுத்து வளர்த்து முன்னோடியாகத் திகழ்ந்தார்.



காந்தியடிகளின் அறிவுரைகளை ஏற்று பல பெரியவர்கள் தங்கள் குடும்பத்தில் ஹரிஜன மணமக்களை ஏற்று திருமணம் செய்து வைத்தனர். உதாரணமாக ஆந்திராவைச் சேர்ந்த கோரா சுப்பாராவ் என்ற பேராசிரியர் பிராமண வகுப்பைச் சேர்ந்தவர். அவர் தம் மகளுக்கு ஒரு ஹரிஜன மணமகனைத் தேர்ந்தெடுத்து மணமுடித்து வைத்தார். அந்த கோரா சுப்பாராவ் என்பவர் காந்திநிகேதன் ஆசிரமத்திற்கு தமது குடும்பத்தினருடன் வந்துள்ளார்.

காந்தியடிகள் தமது நிர்மாணத்திட்டங்கள் என்று மக்களுக்கு வழிகாட்டும் திட்டங்களில் தீண்டாமைஒழிப்பு என்பதையும் சேர்த்து செயல்படுத்த ஏற்பாடு செய்தார் .

இது போன்று இன்னும் ஏராளமான உதாரணங்கள் மூலம் ஹரிசன சேவைகளை காந்தியடிகள் கொண்டுவந்து தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேறவழி வகுத்தார்.

தற்போதும் ஒரு சில இடங்களில் தீண்டாமை காணப்படுகிறது. இதைமக்கள் உணர்ந்து எல்லாரும் சமம் என்பதை உணர்ந்து நாடு முன்னேற பாடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் .

## செய்தித் துளிகள்



நமது பள்ளி மாணவ, மாணவிகள் கல்லுப்பட்டி ஆரம்ப சுகாதர மருத்துவர்கள், ஊாயர்களுடன் இணைந்து கல்லுப்பட்டியின் முக்கிய வீதிகளில் மலோயா மற்றும் டெங்கு காய்ச்சல் விழிப்புணர்வு ஊர்வலம் சென்றனர்.

# பழமொழி

*S.A.P.செல்வகுமார் VII-B*

1. பணம் இல்லாத வியாபாரி நிலமில்லாத விவசாயி மாதிரி
2. பணம் இருந்தால் உன்னை உனக்குத் தெரியாது
   பணம் இல்லாவிட்டால் உன்னை யாருக்கும் தெரியாது
3. பெண்ணின் வாழ்வு என்பது கணவனின் அன்பே
4. தன்னை அறிவது அறிவு .தன்னை மறப்பது மடமை
5. பெண் குலப்பெருமை –பெண் குழந்தை வளர்க்கும் அருமை
6. அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது
7. மதியார் தலை வாசலை மிதிக்க வேண்டாம் தெருச்சண்டை கண்ணுக்கு இனிமை
8. உழைத்து பழக்கமில்லாதவன் உழைப்பை விரும்பமாட்டான்
9. மண்ணின் பயிர்காத்து, அதன் உயிர்காப்பது தண்ணீர் என்னும் மழை

# எயிட்ஸ்

S.A.P.செல்வகுமார் VII-B

முன்னுரை:

இக்கட்டுரைப் பகுதியில் எயிட்ஸ் என்னும் உயிர்க்கொல்லி நோயைப் பற்றியும், பரவும் முறை, தடுக்கும் முறை, உறுதி செய்யும் முறை, மருந்து கொடுக்கும் முறை, பற்றியும் காண்போம்.

பரவும் முறை: ஒருவர்க்கு பயன்படுத்தப்பட்ட ஊசியை மற்றொருவர்க்குப் போடும் போது எயிட்ஸ் பரவும்.



'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற ஒழுங்கான வாழ்க்கை முறையை பின்பற்றாமல் இருப்பதன் மூலம் எயிட்ஸ் பரவும்.

போதை ஊசி போடும் போது எயிட்ஸ் பரவும். எயிட்ஸ் உள்ளவர்கள் மற்றவருக்கு இரத்த தானம் செய்வதன் மூலம் எயிட்ஸ் பரவும்.

பரவாமல் இருப்பது:

கொசு கடிப்பதன் மூலம் எயிட்ஸ் பரவாது. ஒன்றாகச் சேர்ந்து விளையாடுவதன் மூலம், ஒரே ஆடையைப் பலர் அணிவதன் மூலம், ஒன்றாக சாப்பிடுவதன் மூலமும் எயிட்ஸ் பரவாது.

உறுதி செய்யும் முறை :

எயிட்ஸ் என்பதை உறுதி செய்வதற்கு Elisa என்ற Test எடுக்கப்படுகிறது. அதில் எயிட்ஸ் இருப்பது தெரிய வந்தால் அந்த நபருக்கு இரத்தத்தில் CD4 என்ற செல் எவ்வளவு என்பதை கண்டறியமுடியும். CD4 கவுண்ட் 300க்கு குறைவாக இருந்தால் அவர்க்கு (A R T) என்ற மாத்திரை உட்கொள்ள வேண்டும். (Anti Retro Virue Trapi) இதை உட்கொள்வதால் எயிட்ஸ் நோயாளியின் வாழ்நாள் அதிகரிக்கப்படும். மேலும் அவர்களுக்கு காச நோய் (TB Test) சளி பரிசோதனை செய்யவேண்டும். TB க்கும் AIDS –க்கும் சம்பந்தம் உண்டு. காரணம் A I D S நோயாளிக்கு (Immuniti Power) நோய் எதிர்ப்பு சக்தி

கம்மியாவதால் சந்தர்ப்பவாத நோய் நம் உடலில் சேர்ந்து விடும். ஆதனால் கண்டிப்பாக ART சிகிச்சை எடுக்க வேண்டும்.




C D 4 செல் நம் உடலில் அதிகமாக ஒரு முறை C D 4 Test பண்ண வேண்டும்.

C D 4 செல் குறையாமல் இருப்பதற்கு சத்தான உணவு, பழவகைகள், பருப்பு வகைகள், மீன், முட்டை, கீரை, கோழி ஆகிய உணவு உட்கொண்டால் உடலுக்கு மிகவும் நல்லது.

**கர்ப்பிணித் தாயிடமிருந்து குழந்தைக்கு பரவாமல் இருக்கும் முறை:**

எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்ட கர்ப்பிணித்தாயிடம் இருந்து பிறக்கப்போகும் குழந்தைக்கு எயிட்ஸ் வராமல் தடுப்பதற்கு Nevarasin என்ற மாத்திரை கர்ப்பிணி தாய்க்கு பிரசவ வலி எடுத்தவுடன் அரை மணிநேரத்திற்குள் கொடுக்க வேண்டும். .அதன் பின் பிறந்த குழந்தைக்கு 72 மணி நேரத்தில் Nevarasin Syris கொடுக்க வேண்டும்

மருந்து கொடுக்கும் முறை :

குழந்தையின் எடை 1Kg என்றால் 0.2ml கொடுக்கலாம்

குழந்தையின் எடை 2Kg என்றால் 0.4 ml கொடுக்கலாம்.

குழந்தையின் எடை 2 ½ Kg என்றால் 0.6ml கொடுக்கலாம.

இதன் மூலம் குழந்தைக்கு எயிட்ஸ் பரவுவதை தடுக்கலாம்.

முடிவுரை:

இக்கட்டுரை பகுதியில் இருந்து எயிட்ஸ் பரவும் முறை , தடுக்கும் முறை, உறுதி செய்யும் முறை பற்றி நன்றாக தெரிந்து நோய் உள்ள தாய், எயிட்ஸ் இல்லா குழந்தை பெற முடியும்.

"எயிட்ஸ் இல்லா உலகம் படைப்போம்"

## கவிதை

M.அபிநயா V-A

10 முறை வழுந்துவிட்டேன் என்று
கவலைப்படாதே
அதில் 9 முறை எழுந்து நின்றவன்
என்று பெருமைப்படு.
1000 முறை வேண்டுமானாலும் முயற்சிசெய்
ஒரு எதிரியை நண்பனாக்க –ஆனால்
ஒரு முறை கூட முயற்சி செய்து விடாதே
உன் நண்பனை எதிரியாக்க.
தவறான பாதையில் வேகமாக செல்வதை விட
சரியான பாதையில் மெதுவாகச் செல்
அதுவே உன் வெற்றிக்கு முதல் வழி.
மலையை பார்த்து
மலைத்து விடாதே
மலை மீது ஏறினால் அதுவும்
உன் காலடியில்.
தன்னம்பிக்கை உள்ள
மனிதன் தோற்பதில்லை
தன்மேல் நம்பிக்கை இல்லாத
மனிதன் ஜெயிப்பதே இல்லை.
முடியாது என்ற வார்த்தைக்கு
முற்ற புள்ளி வை
முடியும் என்ற வார்த்தைக்கு
தொடர்புள்ளி வை.

# செய்தித் துளிகள்



ஆசிரம நிறுவனர் அமரர் கோ.வேங்கடாசலபதி ஐயா அவர்களின் பிறந்த தின விழா மற்றும் ஆசிரம ஆண்டு விழாவினையொட்டி 26.07.2012 அன்று நடைபெற்ற அறிவியல் கண்காட்சியினை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் நீதியரசர் G.M.அக்பர் அலி அவர்கள் துவக்கி வைத்து பார்வையிட்டபோது எடுத்த படம்.



ஆசிரம நிறுவனர் அமரர் கோ.வேங்கடாசலபதி ஐயா அவர்களின் பிறந்த தின விழா மற்றும் ஆசிரம ஆண்டு விழாவினையொட்டி பள்ளிகளுக்கு இடையிலான பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன.

## கல்வி அவதாரம்

செ.ஐஸ்வர்யா V-D

**அவதாரம்**

இந்த யுகத்திற்கு உரியது. இந்த யுகத்தில் ஒழுக்க நெறிமுறைகள் குறைந்து விடும் என்றார்கள். குறிப்பாக ஆண்களும், பெண்களும் வாழ்க்கை நெறிகெட்டு இழி நிலையில் உழலும் வாய்ப்புகள் நிறைய பெறுவார்கள் என்று கருதப்படுகிறது. பெரியவர்களுக்கு மதிப்பளித்தல், உரிய கடமைகளைச் செய்வதிலிருந்தும் தவறுதல், குறுக்கு வழியில் செல்லுதல், ஆடம்பரம் வெளிச்சம், போலி கௌரவம், ஏமாற்றுதல் போன்ற இன்னோரன்ன இழி பண்புகள் ஏற்றம் பெறும்.

மக்கள் வறுமை வசப்படுவார்கள். பசியும், நோயும் பயங்கரமாக வாட்டும். தாகத்துக்கு தண்ணீரின்றித் தவிக்கும் நிலை ஏற்படும். பக்தி குறையும், பாவச்செயல்கள் பெருகும். அக்கிரமங்கள் அதிகரிக்கும்.

மொத்தத்தில் பொல்லாதவர்களும், போக்கிரிகளும், நல்லவர்களையும், சாதுக்களையும் நசுக்கி நாசமாக்குவர். உலகத்தில் மோசமான நிலை உச்சகட்டத்திற்கு செல்லும்.

அப்போது அநீதிகளையும் அக்கிரமங்களையும் அச்சமின்றி செய்யும் துஷ்டர்களை அழித்து உலகில் தர்மத்தையும், நியாயத்தையும், ஒழுக்கத்தையும் நிலை நிறுத்த திருமால் அவதரிப்பார். அது திருமாலின் பத்தாவது அவதாரமான கல்கி அவதாரமாக அமையும்.

## புதுமைப் பெண்கள்

மு.சங்கரேஸ்வரி VII-B

நாங்கள் காலில் மிதிபடும்
பூக்களல்ல....
கழுத்தில் சூடிக்கொள்ளும்
மாலைகள்!
நாங்கள் எண்ணெய் ஊற்றி
ஏற்றும் தீபங்களல்ல...
என்றுமே
ஒளி வீசிக்கொண்டிருக்கும்
விடி வெள்ளிகள்!
நாங்கள் கோரமாய் வீசும்
புயல்களல்ல....
இதயம் வீசும் தென்றல்
நாங்கள் வெப்பக்கனல்களல்ல...
நிழல்தரும் மரங்கள்!
நாங்கள் வளைந்துவிடும்
கொடிகளல்ல...
நிமிர்ந்து நிற்கும் தாங்கிகள்!
நாங்கள்
அடுப்படி ராணிகளல்ல
கார்முகில் விமானம் வரை
ஓட்டவரும்
புதுமைப் பெண்கள்!.

# ஆசிரியர் பெருமை

சு.சீதாலட்சுமி ஆசிரியை

ஆசிரியர் எனும் சொல்லைப் பிரிப்போமாயின் “ஆசு” என்றும் ‘இரியர்’ என்றும் இரு சொல்லுண்டு ‘ஆ என்றால் மாசாகும், ‘இரியர்’ என்றால் ‘அகற்றுபவர்’ என்றாகும். மனித வாழ்வின் மாசகற்றி நெறிபுகட்டி உயரச் செய்த மாண்பதனால் ஆசிரியர் எனப்பேர் பெற்றார்.

நாசமுற்று அழியாமல் சமுதாயத்தின் நலம் காத்த பெருமை ஆசிரியர் பணிக்கே உண்டு.

வித்தின்றி விளைவதில்லை, மானிடத்தின் விளக்கம் அறிவொழுக்கமின்றி விளைவதில்லை. எத்தனையோ பணிகளுக்கு அடித்தளமாய்

இருப்பதுவும் ஆசிரியப் பணியேயாகும். ஆசிரியர் பெருமையினை உணர்ந்தநாடு அவனியிலே ஒரு நாளும் தாழ்ந்ததில்லை ஆசிரியர் புகழ் போற்றி வாழ்ந்த யாரும் அடையாத சிறப்பில்லை.

பாரினிலே ஆசிரியப் பேரினமே

வகுப்பறைக்குள்அகிலத்தை உருவாக்கும் சிற்பிகள்

நாம் மாசற்ற சிந்தனையின் வடிவங்கள் நாம்

மணிக்கவிதை போன்ற பண்பாளர் நாம்

வீசுகின்ற பூந்தென்றல் போன்றது நமதுள்ளம்

விரிநிலவு் போன்றது நமது அன்பு

நாடு சிறக்க நல்ல பணிகள் செய்வோம்.

நல்லதொரு சமுதாயம் படைத்துக் காப்போம்.



24.11.2012 அன்று நமது பள்ளியில் 12 ஆம் வகுப்பு மாணவர்கள் தமது பெற்றோருக்கு பாதபூஜை செய்தபோது எடுத்த படம்

## செய்தித் துளிகள்



2011-12 கல்வி ஆண்டில் 12 ஆம் வகுப்பு பயின்ற மாணவ, மாணவியருக்கு தமிழக அரசின் இலவச மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் திருமங்கலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு.முத்துராமலிங்கம் அவர்கள் இலவச மடிக்கணினி வழங்கியபோது எடுத்த படம்.

## நட்பு

G.மாரிச்செல்வம் Vii-B

இதயம் கலந்த நட்பை

காலம் கடந்த பின்

யோசித்து பார்

கண்களில் கண்ணீர் கசியும்

தூண்டிலில் சிக்கிய மீனும்

உன்நட்பில் கலந்த நானும்

உன் விடுதலைக்காகவும்

உன் நட்புக்காகவும்

பூக்கள் பூக்கட்டும்

உன் புன்னகையைப் பார்த்து

நட்புத் தொடரட்டும்

கவிதை தெரியாது எனக்கு!

உங்கள் நட்பைத் தவிர வேறு எந்த

கவிதையும் தெரியாது.

## டைம் மேனேஜ்மண்ட்

திருமதி வெ.உமாமகேஸ்வரி ,ஆசிரியை

இந்த உலகில் ஒருவன் எதை இழந்தாலும் அதைத் திரும்பப்பெறமுடியும். ஆனால் திரும்பப் பெறமுடியாத ஒன்று என்று உலகில் இருந்தால் அது இழந்துவிட்ட நேரம் மட்டுமே. அதனால் தான் வாழ்வில் உயர்ந்த பெருமக்கள் அத்தனைபேரும் “டைம்மேனேஜ்மென்ட்” என்று சொல்லக்கூடிய நேரத்தை நிர்வகித்தலில் தனி அக்கறை செலுத்துகிறார்கள். நேரத்தை சரியாக நிர்வகிக்கத் தெரியாதவர்கள் வாழ்வில் என்ன நிலையில் இருந்தாலும் அவர்கள் வெற்றிப்படிக்கட்டில் பயணிக்கமுடியாது.

லாங்பெல்லோ என்ற கவிஞன் நேரத்தைப் பற்றிச் சொல்லும்போது இப்படிச் சொல்கிறார். “கடந்த காலத்தை கவலையுடன் பார்க்காதீர்கள், நிகழ்காலத்தை புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துங்கள். அது உங்களுடையது– நிழல் படிந்த எதிர்காலம் நோக்கி அச்சமின்றி ஆண்மையுடன் செல்லுங்கள்”.

நேரம் என்பது இரக்கமற்றது, கருணை அற்றது. வேண்டியவர், வேண்டாதவர், எழை, பணக்காரர், சிறியவர், பெரியவர் என்ற பாரபட்சங்கள் அற்றது. அதனால் தான் அது யாருக்கும் காத்திருக்காமல் போய்கொண்டிருக்கிறது. எதைப்பற்றியும் கவலைப்படாமல் நேரம் தன்பாதையில் பயணித்துக் கொண்டிருக்கிறது. விலை மதிப்பற்ற இந்த நேரத்தை நாம் எப்படிப்பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம் தெரியுமா? நமது வாழ்நாளில் மூன்றில் ஒரு பங்கைத் தூங்கியே கழிக்கிறோம். பத்தில் ஒரு பங்கை குளித்துக் கழிக்கிறோம். ஆறில் ஒரு பங்கு நேரத்தை உறவினர்கள், நண்பர்களுடன் பேசியே கழிக்கிறோம் .

இவ்வாறு பல விதத்திலும் 70 சதவீத நேரத்தைச் செலவிடுகிறோம். பணியாற்றுவதற்காக எஞ்சியிருப்பது வெறும் 30 சதவீதம் நேரம் மட்டுமே. இந்த 30சதவீத நேரத்தையாவது நாம் புத்திசாலித்தனமாகத் திட்டமிட்டுச் செலவழித்தால் நல்ல பலனைப்பெறமுடியும். குறிப்பாக மாணவப் பருவத்தில் நேரத்தைப் பயனுள்ள விதத்தில் செலவிட கற்றுக்கொள்ளவேண்டும.

இன்றைய உலகம் போட்டிகள் நிறைந்த உலகம் போட்டிகள் எந்த வகையில், எந்தத்திசையில் இருந்து வந்தாலும் அதை எதிர்கொள்ளுகிற ஆற்றலை உருவாக்க் கொள்ள வேண்டும். ஒவ்வொரு மணித்துளியையும் பொன்னைப்போல் போற்றிப் பயனுள்ளவிதத்தில் செலவழித்தால் அதன் பலனை தேர்வில் அறுவடை செய்யலாம். வளமான வாழ்க்கைக்கு அடிக்கல் நாட்டலாம்.

## செய்தித் துளிகள்



விவேகானந்தரின் 150 வது பிறந்தநாளையொட்டி இளைஞர்களின் உடல் நலன் சம்பந்தப்பட்ட பல சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்பட்டன. ஆதில் ஒரு நிகழ்வாக மாணவ மாணவியர் பங்கேற்ற சூரிய நமஸ்காரம் பயிற்சியின் ஒரு நிகழ்வு.

## வேண்டும்

S.காவேரி ஆசிரியை

தூய்மை என்பது
உடைகளில் மட்டுமல்ல
அது –நம்
மனதிலும் வேண்டும்!

வாய்மை என்பது
பேச்சில் மட்டுமல்ல
அது – நம்
செய்கையிலும் வேண்டும்!

கடமை என்பது
காரியம் புரிய மட்டுமல்ல
அது –நம்
உதிரத்திலும் வேண்டும்!

புதுமை என்பது
வார்த்தையில் மட்டுமல்ல
அது –நம்
வாழ்க்கையிலும் வேண்டும்!

எளிமை என்பது
ஏழ்மையில் மட்டுமல்ல
அது – நம்
பதவியிலும் வேண்டும்!

# முன்னேற்றப்பாதையில் இந்தியா

கற்பகஜோதி – 12-அ

'நாடென்ப நாடா வளத்தென' என்பார் திருவள்ளுவர்.ஒரு நாடு தன் தேவைக்காக எந்தநாட்டையும் சாராமல் இருந்தால் அந்தநாடு வளர்ந்தநாடு. என்ன வளம் இல்லை இந்த திருநாட்டில்?, ஏன் கையை ஏந்த வேண்டும் அயல்நாட்டில்? என்பார் கவிஞர் மருதகாசி. அதற்கேற்ப இயற்கை வளங்கள் அனைத்தும் நிறைந்த நாடு நம் இந்தியநாடு. நீளமான கடற்கரை. அளவிறந்த கனிம வளங்கள். அனைத்து பருவநிலைகளும் கலந்த நாடு.

நம் வளங்களைச் சுரண்டுவதற்காகத்தானே அந்நியர் உள்ளே வந்தனர். கொள்ளை கொள்ளையாய் சுரண்டினாலும் குன்றாத வளமுள்ள நாடாகத்தானே திகழ்கிறது. எதில் நாம் குறைந்து விட்டோம் இன்று? உலக அளவில் அமெரிக்கா, சீனாவை அடுத்து ஏற்றுமதியில் மூன்றாம் இடத்தில் இருக்கிறோம் மனித வளம் மிகுந்த நாடுகளில் சீனாவை அடுத்து நாம் தான்.

சீனாவை மிஞ்சும் வகையில் மக்கள் பெருக்கம் இருந்தாலும் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றுள்ளோம். வேலை வாய்ப்புக்களுக்காக வெளிநாடு சென்ற நம்மவர்கள் இப்போது நம் நாட்டிற்கு திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளது. மென்பொருள் உற்பத்தியில் பெங்களூரு நகரம் உலகின் முக்கிய மையமாக திகழ்கிறது. இது நமக்குப் பெருமைதானே? பால் உற்பத்தியிலும், சர்க்கரை உற்பத்தியிலும் உலகளவிலும் நாம்தானே இரண்டாமிடம்.

கடந்த வாரம் மத்திய அமைச்சரவையில் செவ்வாய்க்கு 450 கோடி செலவில், 250 கிலோ எடையில் விண்வெளிக்கலம் அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது. அமெரிக்கா தவிர ஏனைய வளர்ந்த நாடுகளே தயங்கும் போது துணிச்சலான முடிவு எடுத்துள்ள நாடு நம் இந்தியா. உலக நாடுகள் சந்திரனுக்கு பல விண்வெளிக்கலங்களை செலுத்திய போதும் நிலவில் தண்ணீர் படிவங்கள் இருப்பதாகச் கண்டறிந்தது நாம் அனுப்பிய விண்வெளிக்கலந்தான்.

இன்று உலகின் மிகப்பெரிய வங்கி நம் பாரத ஸ்டேட் வங்கிதான். அயல்நாட்டு நிறுவனங்கள் தங்களின் பொருட்கள் அதிகமாக விற்பனையாகும் சந்தையாக இருப்பதால்தான் அதிக அளவில் தங்கள் தொழிற்சாலைகளை இங்கு நிறுவியுள்ளன. நிறுவி வருகின்றன. காரணம் மக்களின் வாங்கும் சக்தி அதிகரித்துள்ளதால்தான்.

நம் நாட்டில் ஏழ்மை இருக்கலாம். இன்று வளர்ந்த நாடுகளிலும் ஏழ்மை இருக்கத்தானே செய்கிறது. இங்கு 30 கோடி மக்களுக்கு இரவு உணவு இல்லை. உலகில் கல்வியறிவு பெறாதவர்களில் இந்தியர்கள் 30% பேர். சுகாதார நிலைமை பற்றி கேட்கவே வேண்டாம். இப்படி எவ்வளவோ குறைகள் இருந்தாலும் இந்தியா முன்னேற்றப்பாதையில் விரைகிறது.

இந்தியாவின் முதுகெலும்பு கிராமங்கள். இன்று அக்கிராமங்கள் தோறும் மின்வசதி, பள்ளிக்கூடங்கள், இலவசக்கல்வி, உதவித்தொகை, வேலைவாய்ப்புக்களில் இடஒதுக்கீடு போன்ற வற்றால் கல்வியில் எவ்வளவு முன்னேற்றம்? ஒருகாலத்தில் கிராமப்புற மாணவர்களுக்கு எட்டாக்கனியாக இருந்த தொழிற்கல்வி இன்று அனைவருக்கும் கிடைக்கிறது. தொலைத்தொடர்பில் குறைந்த கட்டணத்தில் தகவல்களை பரிமாறிக்கொள்ளும் வசதி இன்று வந்துவிட்டது. எவ்வளவு பெரிய முன்னேற்றம்? நாட்டின் ஒற்றுமையைச் சீர்குலைக்கும் வகையில் மதவாதம், நக்சலைட்டுகள் போன்ற தீவிரவாதம், அளிக்கும் கரையான்களாய் சாதிச்சண்டைகள், குண்டுவெடிப்புகள், கலவரங்கள் நிகழ்ந்து கொண்டே இருந்தாலும், பொருள் இழப்பு , உயிரிழப்பு ஏற்பட்டாலும் அவற்றைப் பொறுத்துக் கொள்ளும் சகிப்புத்தன்மை இருப்பதினால்தான் இந்தியா முன்னேற முடிகிறது.

ஊழல்கள் மலிந்திருந்தாலும், அரசியல்வாதிகள் தடம்புரண்டாலும் ஜனநாயகத்தில் அசைக்கமுடியாத நம்பிக்கை உள்ள நாடு நம் நாடு. மருத்துவத்துறையில் உலகத்தரமுள்ள மருத்துவசேவை குறைந்த செலவில் கிடைப்பதால்தான் வெளிநாட்டவர் இங்கு அதிகமாக வருகின்றனர் இது முன்னேற்ற மில்லையா?

கவீசுவரி ஔவை சொன்னது போல,

வரப்புயர நீர் உயரும், நீர்உயர நெல் உயரும்
நெல்லுயர குடி உயரும்,
குடி உயர கோன் உயர்வான்.

இப்பாடலில் வரப்பை உயர்த்தும் போது நீர் அதிகமாகச் செல்லும். உழைப்பு எனும் வரப்பு உயரும் போது முன்னேற்றம் என்ற வெள்ளம் தடையின்றிச் செல்லும்.

ஆகவே இந்தியா முன்னேற்றப்பாதையில்தான் வீறுநடை போட்டுக் கொண்டிருக்கிறது.

## வெற்றி

முடிவே இல்லாத பாதையில்
பயணம் செய்கிறேன்
முடிவில் நீ (வெற்றி) இருப்பாய்

என்ற நம்பிக்கையில்!

# Do good anyway...



***S.Gopalakrishnan***,
*Former Vocational Engineering Instr.*

People are often unreasonable,
illogical, and self-centered...
forgive them anyway
If you are kind, people may accuse
you of selfish ulterior motives...
be kind anyway
If you are successful, you will win
some false friends and some true
enemies...
succeed anyway
If you are honest and frank, people
may cheat you...
be honest and frank anyway
What you may spend years building,
someone may destroy overnight...
build anyway
If you find serenity and happiness,
people may be jealous...
be happy anyway
The good you do today, people will
often forget tomorrow...
do good anyway
Give the world the best you have,
and it may never be enough...
give the world the best you have
anyway
You see, in the final analysis, it's all
between you and God...
it was never between you and
them anyway

# Path to paradise



**P.Thilagavathi,**
*Former Headmistress*

What, on earth, can be a paradise? It can be a highly disciplined institution which imparts quality education to all. " Education without character is a sin" – says Mahatma. Now a days, only a very few people are committed to such a noble mission of venturing on the holistic development of our children. Our Ashram is totally devoted to the all round development of rural, rustic children around us. Owing to our Ashram's tireless efforts, first learning generation from below poverty line families, florish into flying colours, in all walks of life such as teachers, police men, doctors, engineers, technicians and self employed formers etc.

Instead of book- centred education, our Ashram is concentrating on child-centred education which stimulates and encourages children to actively participate in all kinds of educational activities, which includes both curricular and co-curricular. As fragrant flowers atract bees and flies, our institution attracts aspiring students. Dedication and commitment of our staff are reflected in our academic and social achievements. This is a unique place to nurture and nurish the innate and acquired talents of our children. They can inspire and aspire a lot inour campus.

So, budding youngsters – Here is the path to paradise Cherish your life- Don't miss it.

## நாடுகளும் தேசியச் சின்னங்களும்

1. இந்தியாவின் தேசியச்சின்னம்
   சிங்கங்கள் முகப்பு
2. அமெரிக்காவின் தேசியச் சின்னம்
   தங்கக் கழி
3. பங்களாதேஷின் தேசியச் சின்னம்
   நீர் அல்லி
4. நார்வேயின் தேசியச்சின்னம்
   சிங்கம்
5. பாகிஸ்தானின் தேசியச்சின்னம்
   பாறை
6. ஜெர்மனியின் தேசியச் சின்னம்
   தானியப்பூ
7. ஜப்பானின் தேசியச்சின்னம்
   கிறிசாந்திமம்
8. ஸ்பெயினின் தேசியச்சின்னம்
   கழுகு
9. பிரான்ஸின் தேசியச் சின்னம்
   அல்லி
10. இங்கிலாந்தின் தேசியச் சின்னம்
    ரோஜா
11. கனடாவின் தேசியச் சின்னம்
    வெள்ளை அல்லி
12. ஆஸ்திரேலியாவின் தேசியச் சின்னம்
    கங்காரு
13. டென்மார்க்கின் தேசியச் சின்னம்
    கடற்கரை
14. ஹாங்காகின் தேசியச் சின்னம்
    பொகினியா (ஆர்ச்சிட் மரம்)
15. அயர்லாந்தின் தேசியச் சின்னம்
    இலவங்கமும் மூன்று இலைகளும்
16. நியூசிலாந்தின் தேசியச் சின்னம்
    தென்சிலுவை ,கிவி பெரணி
17. பெல்ஜியத்தின் தேசியச் சின்னம்
    சிங்கம்
18. ஜிம்பாப்வேயின் தேசியச்சின்னம்
    ஜிம்பாப்வே பறவை
19. இத்தாலியின் தேசியச் சின்னம்
    வெள்ளை அல்லி
20. நெதர்லேண்டின் தேசியச் சின்னம்
    சிங்கம்

## புதிய சமுதாயம் படைத்திட வா

R.உமா ஆசிரியை

நம் பாரத பூமி பழம்பெரும் பூமி, அறிஞர்கள் பலரை உலகிற்கு அள்ளித் தந்த பூமி, பண்பாட்டின் சிகரம். பல பராக்கிரமசாலிகளை படைத்த பூமி, உலகில் எந்த நாடும் பெற்றிடாத நீண்ட நெடிய கடற்கரையும், கடல் வளமும், ஓங்கி வளர்ந்த மலைகளும் உடையது நம் பூமி . இயற்கையன்னை நமக்காக வழங்கிய பரிசே இப்பாரதம், இப்புண்ணிய பூமி அந்நியருக்கு அடிமைப்படவும் நேர்ந்தது, மக்களெல்லாம் பூக்கத் தவித்த மொட்டாக, புகைக்குள் சிக்கிய தீயாக நீருக்கு அலைந்த வேராக, ஏறத் தவித்த கொடியாக பல துன்பங்களுக்கு ஆளானார்கள், இதைக் கண்டு பொறுக்காத நம் தலைவர்கள் உயிரைத் தியாகம் செய்து குடியரசு கண்டார்கள், ஒற்றுமை வழியில், வெற்றியைக் கண்டார்கள், விடுதலைக்குப்பின், நாடு நல்ல வளர்ச்சியை பெற்றுள்ளது, இருப்பினும் மக்களை அச்சுறுத்தும் பிரச்சனைகள் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டுதான் இருக்கின்றன.

ஊழல், மதுவிலக்கு, பயங்கரவாதம், போன்றவை நாட்டை ஆட்டிப் படைக்கின்றன, இப்படியே சென்றால் இந்தியாவின் எதிர்காலம் என்னாவது?பிரச்சனைகளுக்கு விடியல் எப்போது? காத்திருக்கும்வரை நம் பெயர் காற்றென்று இருக்கட்டும், புறப்பட்டால் நம் பெயர் புயல் என்று புரிய வைப்போம். புதிய விதைக்காக பழைய விதை சாகத்தானே வேண்டுமென்று சத்தமின்றி யுத்தம் செய்ய களம் இறங்கியவர்கள் உண்டு. கட்டபொம்மனும் வ.உ.சியும் நாட்டு விடுதலைக்காக தூக்குமேடையை முத்தமிட்டதும் சிறைச்சாலையை தவச்சாலையாக்கியதையும் நம்மால் மறக்க முடியுமா? பாரதி பாடல்கள்பாடி சுதந்திர உணர்வை பட்டிதொட்டியெல்லாம் பரப்பினான்.

அவன் பாட்டுக்கள் எட்டாத செவிகள் இல்லை, தட்டாத கதவுகள் இல்லை. இப்படி சோதனைகளை சாதனைகளாக்கிய வீரவரலாறு நம்மிடம் ஏராளம் உண்டு. நமது மன உறுதியும் தீர்க்க தரிசனமும் நிச்சயம் புதுச்சமுதாயம் படைக்கும். பகுத்தறிவு இல்லாத பறவைகள் பாடிக் கொண்டே தன் கடமையைச் செய்யும்போது, நம்மால் ஏன் முடியாது.

வாகைசூட வயது ஒரு தடையல்ல. வறுமையும் ஒரு தடையல்ல. காலம் கனியட்டும் என்று காத்திருக்க வேண்டாம். ஞானம் என்ற உடையணிந்து நாட்டுப்பற்று என்ற நகையை பூட்டி முயற்சி என்ற ஆயுதத்துடன் சேவை செய்ய கிளம்பினால் வெற்றிக்கனியை வரைவில் சுவைத்திடலாம்.

அடியைவிட பலம் வாய்ந்தது அன்பு.

அன்பையும், பண்பையும் கொண்டு பவனி வந்தால் அவனியை வெல்லலாம் நமது சுயநலத்தின் சுற்றளவு சுருங்கவேண்டும். பொது நலத்தின் பரப்பளவு விரிய வேண்டும் .

வெற்றி என்பது வியர்வை தந்த விளைச்சல். உழைக்காமல் உயர முடியாது என்பதில் அசையாத நம்பிக்கை கொள்ளவேண்டும்.

நமது செயல்கள் மனச்சாட்சியின் முன்னால் பளிங்குபோல் தெளிவாக நிற்க வேண்டும்.

சாதனையாளர்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்பதை அறிய வேண்டும். செயற்கரிய செயல் செய்து மக்கள் எப்படி வாழ வேண்டும் என்பதை வாழ்ந்து காட்ட வேண்டும் .

ஓர் அழகிய சிற்பம் ஓர் உளி ஓசையில்தான் ஆரம்பம். ஒரு பள்ளியைத் திறப்பவன் 100 சிறைச்சாலைகளை மூடுகிறான். மக்களுக்கு நல்ல வழிகாட்ட கம்பன் ராமாயணம் படைத்தான் வள்ளுவர் குறளைத் தந்தார். இளங்கோ சிலப்பதிகாரம் எழுதினார். இப்படி உழைப்பின் மதிப்பை உயர்த்தி சமுதாயம் வாழ பாடுபட்டவர்கள் பலர்.

நமது உடலும் உயிரும் உள்ளவரை உழைத்து வாழ்வதே புதிய சமுதாயம் படைக்கும் புது வழி அதுவும் தனிவழி.

## செய்தித் துளிகள்



ஆரம்பப் பள்ளியின் பள்ளி மாதிரி பாராளுமன்றம் இந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடைபெற்றது. மாணவ, மாணவிகளின் ஓட்டெடுப்பிற்கு பின் வெற்றி பெற்ற மாணவர்கள் பிரதம மந்திரி, அமைச்சர்களாக பதவியேற்று பள்ளி மற்றும் மாணவர்கள் நலன் குறித்து விவாதம் நடத்திய காட்சி.

# விடுகதைகள்

1. ஒற்றைகாலில் ஆடுவான்
   ஓய்ந்துபோனால் படுப்பான் அவன் யார்?
   பம்பரம்
2. யானை விரும்பும் சேனைவிரும்பும்
   கடித்தால் இனிக்கும் அது என்ன?
   கரும்பு
3. பளபளக்கும் படமெடுக்கும் ஆனால்
   பதுங்கி வாழும் அது என்ன?
   பாம்பு
4. தண்ணீரிலே நீந்தி வரும் தரையிலே
   தாவி வரும் அது என்ன?
   தவளை
5. துள்ளித்தறிவான் தண்ணீரில்
   துடித்துத் துவள்வான் கரையில்
   அவன் யார்?
   மீன்
6. மரம் உண்டு அடுப்பெரிக்க
   உதவாது. சீப்பு உண்டு தலைவார
   முடியாது.பூ உண்டு கொண்டையில்
   சூட முடியாது அது என்ன?
   வாழைமரம்
7. அடிமேல் அடிவாங்கி
   அனைவருக்கும் ஆனந்தம்
   தருவான் அவன்யார்?
   மத்தளம்
8. சடக்கென்று வருவான்
   சத்தமிட்டுப்போவான் அவன் யார்?
   தும்மல்
9. ஓசையிடுவான் உணவு சமைப்பான்
   அவன் யார்?
   குக்கர்
10. பகலில் தூங்கி இரவில் விழிப்பான்
    அவன் யார்?
    விண்மீன்கள்
11. ஒன்றை கோழிக்கு வயிறுநியை
    முட்டை அது என்ன?
    மிளகாய்
12. பையில் இது இருந்தால்
    வேறுஎதுவும் இருக்காது அது
    என்ன?
    கிழிசல்
13. நூறு கிளிக்கு ஒரேவாய் அது என்ன?
    வாழைப்பூ
14. உச்சிக்கிளையில் சாட்டை தொங்கும்
    அது என்ன?
    முருங்கைக்காய்

# விண்ணைத் தொட்டது சதம்

முரளிகிருஷ்ணன் பட்டதாரி ஆசிரியர்

2012 செப்டம்பர் 9- ஞாயிற்றுக்கிழமை சரியாக காலை மணி 9.53 க்கு ஆந்திரமாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து விண்ணில் பாய்ந்து சென்ற "நமது பி.எஸ்.எல்.வி- சி21" ராக்கெட்டின் அழகைக்கண்டு வியக்காதவர் எவரும் இல்லை.

இந்திய விண்வெளி ஆய்வுமையம் செயல்படத் துவங்கி 50 ஆண்டுகள் ஆகின்றன. இந்த பொன்விழா ஆண்டில் நாட்டின் 100 வது ராக்கெட்டை ஏவியதுடன் விண்வெளித் துறையில் சாதனைகள் புரிந்துவரும் ஆறு நாடுகளில் இந்தியாவும் ஒன்று என்ற பெருமிதத்தை நிலை நாட்டிவருகின்றனர் நமது இஸ்ரோ விஞ்ஞானிகள். அன்றைய தினம் ராக்கெட் ஏவும் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பாரதப்பிரதமர் மன்மோகன்சிங் அவர்களும் விஞ்ஞானிகளை மகிழ்ச்சியில் கட்டித் தழுவி "நாட்டிற்கு பெருமை தேடித்தந்த இந்த விஞ்ஞானிகளை நினைத்து இந்திய நாடே பெருமைப்படுகிறது" என்று புகழாரம்சூட்டினார்.




1. தற்போதைய வெற்றிப்பயணம் முற்றிலும் வர்த்தக ரீதியானது.
2. ராக்கெட்டுடன் இரண்டு செயற்கைக்கோள்கள் அனுப்பப்பட்டன.
3. ஒன்று பிரான்ஸ் நாட்டின் "ஸ்பாட்-6" என்ற ரிமோட் சென்சிங் செயற்கைக்கோள். இதனை தயாரித்தது "ஆஸ்ட்ரியம்" எஸ்.ஏ.எஸ் என்ற ஐரோப்பிய விண்வெளி ஆய்வு நிறுவனம்
4. மற்றொன்று ஜப்பான் நாட்டு செயற்கைக்கோள் "பிராய்ட்ரஸ்" இதனை தயாரித்தது ஜப்பானைச் சேர்ந்த "ஒசகோ இடிடியுட் ஆப் டெக்னாலஜி" என்ற பல்கலைக்கழகம்
5. இந்த இரண்டு செயற்கைக்கோள்களும் பூமியில் இருந்து 655 கி.மீ தொலைவில் நிலைநிறுத்தப்பட்டுள்ளது.
6. 1975- ஏப்ரல் ல19ல் துவங்கிய இஸ்ரோவின் விண்வெளிப்பயணத்தின் முதல் செயற்கைக்கோள் ஆரியபட்டா ரஷ்ய ராக்கெட் உதவியால் விண்ணில் ஏவப்பட்டது. ஆனால் இன்று 62 செயற்கைக் கோள்களை சொந்தமாக தயாரித்து ஏவியுள்ளோம்.
7.அத்துடன் பிற நாட்டு செயற்கைக் கோள்களை சுமந்து செல்லும் 37 ராக்கெட்டுகளையும் விண்ணில் செலுத்தியுள்ளோம்.
8. இதுவரை அனுப்பப்பட்ட 21 பி.எஸ்.எல்.வி ராக்கெட்டுகளில் ஒன்றைத் தவிர அனைத்தும் வெற்றிகரமாக அனுப்பப்பட்டன.
9. இது இஸ்ரோவின் புதிய மைல்கல் 2013-14 ல் ரஷ்யாவுடன் சேர்ந்து- செவ்வாய் கிரகத்தை ஆய்வு செய்ய நாம் அனுப்பவிருக்கும் விண்கலப் பயணம் வெற்றிகரமாக அமையும் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை.

Xspkakhd ,yf;if nehf;fp btw;wpg;gazk; bra;a[k; ,!;nuhtpd; jd;dk;gpf;ifia ghuhl;LtnjhL- bgUika[k; bfhs;nthk;.

## செய்தித் துளிகள்



போலியோ சொட்டு மருந்து சிறப்புமுகாம் கல்லுப்பட்டி பேருந்து நிலையத்தில் ஆரம்ப சுகாதார மருத்துவ அதிகாரிகளுடன் இணைந்து நம் பள்ளி நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் சொட்டு மருந்து வழங்கினர். முகாமினை நம் பள்ளித் தலைமையாசிரியர் திரு.க.முத்துராமலிங்கம் அவர்கள் துவக்கி வைத்தபோது எடுத்த படம்.

# நாளைய உலகம் நம் கையில்

கோ. விஜயராணி

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்' என்றார் கணியன் பூங்குன்றனார். 'கெட்ட போரிடும் உலகை வேரோடு சாய்ப்போம்" என்றார் பாரதிதாசன். போரைத் தடுப்போம் என்றார் பட்டுக்கோட்டை. இவர்களைப் போல அமைதியான உலகத்திற்காக அஸ்திவாரம் அமைத்தவர்கள் பலர். அன்றைய உலகில் போர்கள் மக்களுக்குச் சவாலாக இருந்தன. இன்று போர்கள் இல்லையென்றாலும் பல்வேறு பிரச்சனைகள் மனிதனை ஆட்டிப்படைத்து அமைதியை கெடுத்து வருகின்றன. எங்கும் ஊழல், கலாச்சார சீரழிவு, இயற்கை மாசுபாடு, நோய்கள் அதிகரிப்பு, மதுவிலக்கு என்று பிரச்சனைகள் கூடிக்கொண்டே போகின்றன.

வறுமை, அறியாமை, எழுத்தறிவின்மை ஒழிக்கப்பட்டாலும் மக்களுக்கு தரமான வாழ்க்கை எட்டாக் கனியாகத்தான் உள்ளது.

மக்களிடம் அறிவும் திறமையும் வளர்ந்திருந்தாலும் பிறக்கும்போதே சிசுக்கள் இறப்பதும், கொல்லப்படுவதும் நடக்கத்தானே செய்கிறது. விளைநிலங்கள் வீடாகத்தான் மாறி வருகின்றன. குறுக்கு வழியில் சம்பாதிக்கத்தான் வரும்புகிறார்கள். கடின உழைப்பை வெறுக்கத்தான் செய்கிறார்கள். களவு, கொலை, கொள்ளை போன்றவை அன்றாடம் நாளிதழ்களை அலங்காரம் செய்கின்றன.

ஏவுகணை அனுப்புவதிலும், சூப்பர் கம்ப்யுட்டர் தயாரிப்பிலும், Smart Phone கண்டுபிடிப்பிலும் கொடிகட்டிப் பறந்து கோட்டையைப் பிடித்தாலும் கிராமங்களிலும், நகரங்களிலும் அன்றாடப் பழைப்புக்கே திண்டாடும் தினக்கூலிகள் உலாவருவது தினசரிகாட்சி. ஆண்டுதவறாமல் அடிக்கடி இயற்கைச் சீற்றங்கள் நிகழ்வது நிரந்தரக்காட்சி. முனிதன் சாதனைகள் செய்தாலும் கடுமையான சோதனைகளை சந்திப்பது வாடிக்கையாகிவிட்டது. இனியும் இந்த நிலை தொடர்ந்தால் நம் வாழ்க்கை ஒரு கேள்விக்குறி . காலம் எவருக்காகவும் காத்திருப்பதில்லை. சேவைக்கு மணி ஒலித்திருக்கிறது. நம் கடமையை செய்ய முயல்வதே சரியானது. நாம் வாழும் பூமிக்கு நாம் அரணாக, ஆபரணமாக விளங்க முயற்சியை சிறகுகளாக்குவோம். நாளையும் உலகம் நம் கையில்.

என்ன வளம் நம்மிடம் இல்லை? கரும்புக்குள் சாறும், கடலுக்குள் உப்பும், மலருக்குள் மணமும் வைத்த இறைவன் நமக்குள்ளே மன உறுதியையும் திறமையையும் பண்பையும் நல்ல பார்வையையும் வைக்கவில்லையா? நமக்காக அருட்கொடைகளை வாரி வழங்கியுள்ளான்.

பெரியோர்களே!

எல்லா வளமும் நமக்குள்ளேயே உள்ளது

**நம்பிக்கை வைப்போம். நிச்சயம்**

1. வயோதிகள் வாலிபனாவான்
2. அடிமை விடுதலை பெறுவான்
3. முடவன் நடப்பான்
4. சோம்பேறி உழைப்பான்
5. செலவாளிசேமிப்பான்
6. கோழை வீரனாவான்
7. சண்டை சமாதானம்பாடும்
8. நட்பு நன்றி கூறும்
9. பிரச்சனைகள் தீரும்
10. நாளை உலகம் நம் வசப்படும்

என் எண்ணங்களை உங்கள் மத்தியில் வார்த்தைகளாக்கி, நம்பிக்கை வரிகளாக்கியுள்ளேன்.

வாழ்வது ஒருமுறை –நம்மை
வாழ்த்தட்டும் தலை முறை.

# நிலவு

*G.Buvaneshwari XI-A*

இரவு
முழுவதும் நான் (நிலவு)
விழித்திருப்பேன்.
உன்



கண்கள்
அசந்து
இந்த
இரவு,நேரம் உன்
கனவுகளை
யாரும்
கலைக்காமல்
இருக்க
உனக்காக